பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 21 திங்கட்கிழமை 03.02.2025 கதிர் 087

## இனி இது ரகசியம் அல்ல!



மாவையின் தசாப்தம் நேற்றோடு முடிவுக்கு வந்தது. அதுமட்டுமல்ல அவரை முன்னிறுத்தி, தமது அரசியல் நல்களைத் தேவைகளை நிறைவேற்றிவிடத் துடித்தவர் ☞ 2

# தேசத்தோடு கலந்தார் மாவை



மறைந்த தலைவர் மாவை சேனாதிராசாவின் புகழுடல், நேற்று அவரது சொந்த இடத்தில் தீயுடன் சங்கமமானது. தனது இறுதிமூச்சுவரை தமிழ் மக்களுக்கான வாழ்ந்த அந்தத் தலைவர் தேசத்தோடு கலந்தார்.

மாவிட்டபுரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக அவரது புகழுடல் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுக் காலை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாவிட்டபுரம் தச்சன்காடு இந்துமயானத்தில் அன்னாரது பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்வில் அரசியல்வாதிகள், ☞ 2

## போலித் தகவல்

தேர்தல் ஆணைக்குழுவில் தொழில் வெற்றிடங்கள் காணப்படுவதாக வட்செப் ஊடாக போலித் தகவல்கள் பகிரப்படுவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு தொழில் வாய்ப்பை வழங்குதல், வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிப்புகள் விடுக்கப்படவில்லை என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ☞ 2

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து

## மேலும் தகவல் தருவதற்கு அசாத் மௌலானா தயார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சனல் 4 அலைவரிசைக்கு தகவல்களை வழங்கிய அசாத் மௌலானா என்றழைக்கப்படும் மொஹமட் மஹிலார் மொஹமட் ஹன்ஸீர் மேலும் தகவல்களை வழங்க தயாராகவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தகவல்களை வழங்குவதற்காக அசாத் மௌலானா நாடு திரும்புவது தொடர்பில் உறுதியான தீர்மானம் எதுவும்ம் இதுவரை எடுக்கப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அசாத் மௌலானா அரசியல் தஞ்சம் ☞ 8

## மின்சார சபை ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்படாது

இலங்கை மின்சாரசபை ஒருபோதும் தனியாருக்கு விற்பனை செய்யப்பட மாட்டாது. வலுசக்தி துறையில் அரசின் இறையான்மை மற்றும் உரிமை பாதுகாக்கப்படும் அதேவேளை, பணியாளர்களின் தொழில் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்தும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார்.

அமைச்சர் நுரைச்சோலை லக்விஜய மின்உற்பத்தி நிலையத்தில் கண்காணிப்பு களஆய்வு மேற்கொண்டிருந்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னரே நாம் இந்நிறுவனத்தை விற்பதற்கு எதிர்ப்பினை வெளியிட்டிருக்கின்றோம். எமது அந்த இலக்கு மற்றும் வேலைத்திட்டம் இன்றும் அவ்வாறே உள்ளது. வலுசக்தி மற்றும் நிதித் துறைகளில் அரசின் இறையான்மை, உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்று நாம் தேர்தலுக்கு முன்பிருந்தே வலியுறுத்தி வருகின்றோம். அதற்கமையவே நாம் தற்போதும் செயற்பட்டு வருகின்றோம்.

எந்த வகையிலும் நாம் ☞ 2

## கொள்கலன் நெருக்கடியை ஆராயக் குழு நியமனம்

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் போக்குவரத்தை நிறுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து ஆராய நிதி அமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது.

துறைமுகத்தில் அடுக்கிவைக்கப்பட்டுள்ள கன்டெய்னர்களை அகற்றாமல் இருப்பது திட்டமிட்ட நாசகார செயலா என இக்குழு விசாரிக்க உள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட 323 கொள்கலன்களை சுங்க சோதனைக்கு உட்படுத்தாமல் அனுமதித்தமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைக்குரிய சூழ்நிலையை ஆராயவும் இந்த குழு பணிக்கப்பட்டுள்ளது.

கருவூல துணைச் செயலர் ஏ. கே. செனவிரத்ன அந்தக் குழுவின் ☞ 8

## தமிழ் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த தலைவர் மாவை

### அரசியல் தலைவர்கள் அஞ்சலி உரை

மக்களுக்காக தன்னை அர்ப்பணித்த மூத்த தலைவரே மாவை சேனாதிராசா என்று அரசியல் தலைவர்கள் தெரிவித்தனர். அவரது இறுதி அஞ்சலி நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றும்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபயவர்த்தன தெரிவித்ததாவது:

மாவை.சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வில் வருகை தந்திருக்கும் மக்கள் கூட்டத்தினைப் பார்க்கின்றபோது, அவர் தமிழ் மக்களுக்காக எவ்வளவு தூரம் பணியாற்றியிருக்கின்றார் என்பது மிகத்தெளிவாகத் தெரிகின்றது.

அதுமட்டுமன்றி, அவருடன் நாடாளுமன்றத்தில் இணைந்து செயற்பட்ட காலத்தினை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருவதுடன், அவர் எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்ட ஒருவராகவும் உள்ளார்.

மாவை.சேனாதிராஜா எப்போதும் மக்களின் பிரச்சினைகளுக்காகக் குரல்கொடுக்கும் அதேநேரம், அவர்களின் விருப்பங்கள் தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே இறுதி வரையில் ☞ 8

## சுதந்திர தினத்தை முன்னிட்டு மின் அலங்காரங்கள் இல்லை

### மாகாண சபைகள் அமைச்சு அறிவிப்பு

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினத்தை ஒரு விசேட நிகழ்வாகக் கருதி, 01/2025 சுற்றறிக்கையின் சில விதிகளை செயல்படுத்த வேண்டாம் என்று பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேலும் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடந்தஜனவரிமாதம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி 1 முதல் 7ஆம் திகதி வரை ஒரு வாரத்திற்கு அனைத்து அரச கட்டடங்களிலும் தேசியக் கொடி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ☞ 8

## யாழ். மாவட்டத்தில் 3,500 ஏக்கர் காணிகள் இன்னும் படைகள் வசம்

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச மற்றும் தனியார் காணிகளில் சுமார் 3575.81 ஏக்கர் பாதுகாப்பு தரப்பினரின் பிடியில் காணப்படுகிற நிலையில் 2624.29 ஏக்கர் தனியார் காணிகள் பாதுகாப்பு தரப்படும் காணப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கலந்துரையாடலின் போது குறித்த புள்ளிவிவரம் ☞ 2

## போரை முடித்துவைத்தார் என்பதற்காக மகிந்தவை சுமந்தபடியே திரியமுடியாது

### இளைஞர் விவகார பிரதி அமைச்சர் விளக்கம்

போரை முடிவுக்கு கொண்டு வந்தார் என்பதற்காக மஹிந்த ராஜபக்சவை தோளில் சுமந்துகொண்டே திரியமுடியாது. கௌரவம் என்பதொன்று இருக்குமாயின் மஹிந்த ராஜபக்ச உத்தியோகபூர்வ அரச இல்லத்தில் இருந்து வெளியேறவேண்டும் என இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்தார்.

அவர் நேற்று கொலன்னாவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## புலி ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்த மகிந்தவை பழிவாங்கும் ஆளும்தரப்பு

### இப்படிக் கதைவிடுகிறார் பெரமுனவின் செயலாளர்

விடுதலை புலிகளின் ஆதரவாளர்களையும், புலம்பெயர் அமைப்புக்களையும் திருப்திப்படுத்துவதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆளும்தரப்பு பழிவாங்குகிறது. அரச இல்லத்தில் இருந்துவெளியேறுமாறு முடிந்தால் ஆளும்தரப்பு உத்தியோகபூர்வ கடிதத்தை அனுப்பவேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் அநுதாரபுரத்தில் நேற்று கிராமத்துக்கு கிராமம் மக்கள் சந்திப்பை ஆரம்பித்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் பிரதான கொள்கையாக முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தவுடன் 24 மணித்தியாலங்களில் அனைத்தையும் மாற்றியமைப்பதாக குறிப்பிட்ட ஆளும்தரப்பு, இன்று முன்னைய ஆட்சிகள் மீது விமர்சனங்களை மாத்திரமே முன்வைக்கிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

களின் அரசியலும் முடிவுக்கு வந்திருக்கின்றது.

சுகயீனம் காரணமாக ஜனவரி 28 யாழ்.போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட மாவை சேனாதிராசா, மறுநாள் தனது 82 ஆவது வயதில் உயிரிழந்தார். பெப்ரவரி 2 அவரது புகழுடல் தீயுடன் சங்கமமானது.

மாவையின் இறுதிச் சடங்கு நடந்த தச்சன்காடு மயானத்தில் தமிழினத்தின் தமிழ் அரசுக்கட்சியின் துரோகிகள் எனப் பெயரிடப்பட்ட பதாகை காட்சிப்படுத்தப்படுத்தப்பட்டிருந்தது. வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் தேசியத்தை நேசிக்கும் தமிழ் மக்கள் என்ற அநாமதேயப் பெயரில் அந்தப் பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதனை அகற்றுவதற்கு மாவையின் குடும்பத்தினரோ அல்லது இறுதி நிகழ்வின் ஏற்பாட்டாளர்களோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது அங்கு ஒரு செய்தியை முன்னிறுத்தி நின்றது.

மாவையின் இறப்பிலிருந்தே, அதனை முன்வைத்து ஒரு அரசியலை கட்சிக்குள் முன்னெடுக்க ஒரு தரப்பினர் முன்னின்றனர். துரதிஷ்டவசமாக மாவையின் குடும்பத்தினரில் சிலரினது ஆதரவுமாவது அவர்களுக்கு இருந்தது. விளைவு மாவை என்கிற கட்சித் தலைவரின் மறைவை ஒரு குடும்பத் தலைவரின் மறைவாகச் சுருக்கிவிட்டார்கள்.

மயானத்தில் காணப்பட்ட பதாகையில் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், கட்சித் தலைவர் சிவஞானம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் எனப் பலரின் ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கட்சியின் மத்திய குழுவில் தலைமைத்துவம் குறித்த இழுபறி, பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு வழி ஏற்படுத்தும்படி கேட்டு மாவைக்குக் கடிதம் எழுதியவர்களின் படங்களே அவை என்று கூறப்பட்டது.

அந்தப் பதாகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் நேற்றைய இறுதிக் கிரியைகளில் பங்கெடுத்திருக்கவில்லை. முன்னதாக, சனிக்கிழமை இரவு மாவைக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் சிலருக்கு ஒரு குழுவினரால் இடைஞ்சல்கள் ஏற்படுத்தப்பட்டது. குழப்பங்களை ஏற்படுத்திய குழுவினரைத் தயார்ப்படுத்தித் தூண்டிவிட்டுப் பின்னணியில் செயற்பட்டதிலும் முகப்புத்தகம் வழியாக வெறுப்பூட்டலைப் பரப்புவதிலும் முன்னின்று செயற்பட்டவர் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரின் மகன் என்றும் சொல்லப்படுகின்றது.

இளம்கன்று பயம் அறியாது என்பது மட்டுமல்ல பக்குவமும் அறியாது. அதைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தவேண்டியவரான தந்தையார் அதை வேடிக்கைபார்த்து ரசித்திருப்பது தலைமைத்துவ அழகு அல்ல. பதவிக்காக இன்று செத்தவீட்டில் அரசியல் செய்து ஒரு தலைவனை மலினப்படுத்தத் துணிந்தவர்கள் நாளை அதே பதவிக்காக மக்களையும் பிளவுபடுத்திக் காட்டிக்கொடுக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்.

மாவையின் இறப்பு, உடல்நலக்குறைவை தாண்டி மன அழுத்தத்தால் ஏற்பட்ட ஒரு விடயம் என மாவையின் சகோதரர்களும் உறவினர்களும் கருதுகின்றனர் என்று தெரிகிறது. மாவையின் மனநெருக்கீட்டுக்கு காரணம் அவர் தலைமைப் பொறுப்பிலிருந்து இறக்கப்பட்டதுதான் என்று அவர்கள் கருதுகின்றார்கள். எனவே அதற்குக் காரணமானவர்கள் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளக்கூடாது என்பது உணர்வாக இருந்தது. இழப்பின் துயரத்தால் அவர்கள் நிதானமிழப்பது இயல்புதான். ஆனால், அவர்களுக்குப் பக்குவமாக அதை எடுத்து விளக்கி மாவையை மக்களின் தலைவனாக வழியனுப்பி வைத்திருக்கவேண்டியவர்கள் அந்த உணர்வெழுச்சியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டமை கீழ்த்தரமான அரசியல். இதையேதான் அவர்கள் மாவையின் இறுதிக் காலத்திலும் செய்து அவரை மக்கள் முன்னால் மதிப்பிழக்க வைத்தார்கள். இறுதிச் சடங்கிலும் அருகிலிருந்தும் அதையே செய்துள்ளார்கள் என்பது தமிழர் அரசியல் எதிர்காலத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இந்தச் சதி வலைக்குள் சிக்கிக்கொண்டு மாவையின் பெயரைக் கெடுத்து கட்சியையும் பாதித்துவிடக்கூடாது என்ற காரணத்தாலேயே, முரண்பாடுகள் பிரச்சினைகளைத் தவிர்க்கும் வகையில் கட்சியத் தலைவர் உட்பட மத்திய குழுவின் உறுப்பினர்கள் பலரும் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கிக்கொண்டார்கள் என்று அறிய வந்தது. அவர்கள் வருவார்கள், அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கலம்விளைவித்து தமது அற்ப ஆசைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று காத்திருந்தவர்களுக்கு அது பெருத்த ஏமாற்றம்தான். இருந்தாலும் அவர்களை வரமால் தடுத்ததே தமது சாதனைதான் என்று பெருமை பீற்றிக்கொள்வார்கள். மாவையின் இறுதிச் சடங்கையும் வரலாற்றில் கறைபடிந்த ஒன்றாகத் தாம் மாற்றியிருப்பதை அறியாமல்.

இனி மாவையும் இன்றி அவர்கள் யாரைத் தூண்டிவிட்டு அரசியல் செய்வார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தேசத்தோடு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது அமைப்பினர், மத குருமார்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

1942ஆம் ஆண்டு ஒக்டோபர் 27ஆம் திகதி பிறந்த மாவை. சேனாதிராசா வீட்டில் தவறிவிழுந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சைகள் பயனின்றி ஜனபரி 29 அன்று காலமானார்.

## யாழ். ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்பட்டது.

2025 தை மாதம் 31ஆம் திகதி வரையான தரவுகளின் அடிப்படையில் குறித்த புள்ளிவிவரம் வெளியாகி உள்ளது.

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக வலி. வடக்கில் விடுவிக்கப்படாத தனியார் காணிகள் அனேகமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள நிலையில் விமானப் படையினரும் கணிசமான காணிகளைத் தம்வசம் வைத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் காணிகளில் இராணுவத்தின் பிடியில் 1775.27 ஏக்கர், விமானப் படையினரிடம் 660.05 ஏக்கர், கடற்படையினரிடம் 160.67 ஏக்கர், பொலிஸாரிடம் 28.28 ஏக்கர் காணப்படுகின்றன.

அதேபோல், யாழ். மாவட்டத்திலுள்ள அரச காணிகளில் 951. 5 2 ஏக்கர் பாதுகாப்பு தரப்பினரிடம் காணப்படுகின்ற நிலையில் இராணுவத்திடம் 411.66 ஏக்கர், விமானப் படையினரிடம் 349.82 ஏக்கர் கடற்படையினரிடம் 179.70 ஏக்கர் மற்றும் பொலிஸாரிடம் 10.34 ஏக்கர் காணப்படுகிறது.

## மின்சார ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிறுவனத்தை விற்க மாட்டோம். மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் என்பன தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதை மாத்திரமே மறுசீரமைப்பாக மேற்கொண்டிருக்கின்றோம். அவை நூறு வீதம் அரச நிறுவனங்களாகும். இவற்றில் எதுவுமே தனியாருக்கு உரித்துடையவை அல்ல. எனவே இந்த நிறுவனங்களின் எதிர்காலம், தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு என்பவற்றை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

நாட்டின் தினசரி மின்சாரத் தேவையில் 40 சதவீதத்தை வழங்கும் லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, நாட்டின் மின்சார அமைப்பின் தொடர்ச்சியான மற்றும் நிலையான பராமரிப்புக்கு, அது மிக உயர்ந்த நிலையில் பராமரிக்கப்பட்டு சிறந்த முறைகளைப் பயன்படுத்தி இயக்கப்பட வேண்டும். மேற்படி செயற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் திருப்தியடைகின்றோம் என்றார்.

## போரை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு என்ற ரீதியில் பொருளாதார மட்டத்தில் மாத்திரம் வங்குரோத்து நிலையடையவில்லை. சமூக கட்டமைப்பிலும் வங்குரோத்து நிலையடைந்துள்ளோம். சிறந்த முன்னேற்றத்துக்காகவே 'கிளீன் ஸ்ரீ லங்கா' செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சகல அமைச்சுகளுக்கும் 'கிளீன் ஸ்ரீ

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# நான் சட்டத்திற்கு கட்டுப்பட்டவன் ஒருபோதும் அதை மீறமாட்டேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு



ஆட்சியாளர்கள் சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டும். இல்லையேல் ஒழுக்கமற்ற நாடே உருவாகும். ஒழுக்கமான நாட்டை கட்டியெழுப்புவதே தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் நோக்கமாகும். நான் சட்டத்துக்கு கட்டுப்படுகிறேன். எனது அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்துக்கு கட்டுப்படுகிறார்கள். நாம் ஒருபோதும் சட்டத்துக்கு மேல் செயல்பட மாட்டோம் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி குருநாகலில் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றியாற்றியதாவது:

குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். தாஜுதீன் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் இவை அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் இல்லை. 2009ஆம் ஆண்டு ஜனவரி 9 பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டார். 16 வருடங்கள் கடந்துள்ளன. அதைச் செய்தவர்களை பொலிஸ் திணைக்களத்தால் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளதா? இல்லை. எமது பொலிஸ் திணைக்களத்தில் திறமையான அதிகாரிகளே உள்ளனர். எந்தவொரு சர்ச்சைக்குரிய குற்றங்களாக இருந்தாலும் அதனை பொலிஸ் திணைக்களம் கண்டு பிடிக்கிறது. ஆனால் லசந்த, தாஜுதீன் தொடர்பில் உண்மைகளை அறிய முடியாமல் போயுள்ளது.

எக்னெலிகொட உள்ளிட்டவர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களை ஆளும் தரப்பே தாக்கியது. அதுவே உண்மை. குற்றவாளிகள் அரசியல் ரீதியாகப் பாதுகாப்பு பெற்றனர். இது தொடர்பில் உண்மைகளை கண்டறிய வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவேண்டும். அந்த மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். குற்றங்களைச் செய்துவிட்டு குற்றவாளிகள் சுதந்திரமாக வெளியே இருக்க முடியுமானால் அரசுகள் இருந்து என்ன பயன்? அதிகார பலம் உள்ளவர்கள் சட்டத்துக்கு அஞ்சுவதில்லை. சட்டத்தை மதிப்பதில்லை. ஒரு தலைவரின் பிள்ளையிடம் 7 துப்பாக்கிகளை வழங்கி பாதுகாப்பையும் ஒப்படைத்துள்ளனர்.

ஆட்சியாளர்கள் சட்டத்துக்குக் கட்டுப்படவேண்டும். ஆட்சியாளர்கள் அவ்வாறு சட்டத்துக்கு கட்டுப்படவில்லை என்றால் ஒழுக்கமற்ற நாடே உருவாகும். ஒழுக்கமான நாட்டைக் கட்டியெழுப்புவதே தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் நோக்கமாகும். நான் சட்டத்துக்கு கட்டுப்படுகிறேன். எனது அமைச்சர்கள் சட்டத்துக்கு கட்டுப்படுகிறார்கள். எனது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்துக்கு கட்டுப்படுகிறார்கள். நாம் சட்டத்துக்கு மேல் செயல்படமாட்டோம். எமக்கு அத்தகைய நாடு கிடைக்கவில்லை. ஆனால் எமது சந்ததிக்காவது அத்தகைய நாடு கிடைக்கவேண்டும் என்றார்.

# சுதந்திரக் கொண்டாட்டத்திற்கு ரூ. 80 மில்லியன் ஒதுக்கீடு

'தேசிய மறுமலர்ச்சிக்காக அனைவரும் அணிதிரள்வோம்' என்ற தொனிப்பொருளில் இலங்கையின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று இடம்பெறவுள்ளன. வழமைக்கு மாறாக இம்முறை காலி முகத்திடலில் அன்றி சுதந்திர சதுக்கத்தில் இந்நிகழ்வுகளுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இம்முறை சுதந்திர தின நிகழ்வுகளுக்காக 80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தன்று நண்பகல் 12 மணிக்கு கடற்படையினரால் சம்பிரதாயபூர்வமாக 25 மரியாதை வேட்டுகள் தீர்க்கப்படும். பொலிஸாருடன் இணைந்து அன்றைய தினத்துக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அன்றைய தினத்தில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் குறைக்கும் வகையில் ஒத்திகைகளும், பிரதான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஏற்பாடுகள் குறித்து இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ தெரிவித்ததாவது:

ஒட்டுமொத்தமாக 4421 பேர் மரியாதை அணி வகுப்புக்களில் பங்கேற்கவுள்ளனர். அவர்களில் 1211 இராணுவத்தினரும், 668 கடற்படையினரும், 461 விமானப்படையினரும், 289 பொலிஸாரும், 182 விசேட அதிரடிப்படையினரும், 175 சிவில் பாதுகாப்பு படையினரும், 486 தேசிய கெடட் படையினரும் உள்ளடங்குகின்றனர்.

சுதந்திர தின நிகழ்வின் பங்கேற்கும் படையினரின் எண்ணிக்கை 40 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 6,745 வீரர்கள் மரியாதை அணிவகுப்புக்களில் பங்கேற்றிருந்த நிலையில், இம்முறை அந்த எண்ணிக்கை 4,421 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அத்தோடு இம்முறை எவ்வித வாகன அணிவகுப்பும் இடம்பெறாது.

தேசியக் கொடியை ஏந்திச் செல்வதற்காக விமானப்படையின் 3 உலங்கு வானூர்திகள் மாத்திரமே பயன்படுத்தப்படும். கடந்த ஆண்டு 19 உலங்கு வானூர்திகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அத்தோடு இம்முறை எவ்வித வாகன அணிவகுப்பும் இடம்பெறாது. முப்படை வீரர்களின் மரியாதை அணிவகுப்பு மாத்திரமே இடம்பெறவுள்ளது - என்றார்.

# மூவர் வெட்டிக் கொலை

அம்பலாந்தோட்டை, மாமடல பகுதியில் இடம்பெற்ற மோதலில் மூன்று பேர் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

6 பேர் கொண்ட குழு வீடொன்றிற்கு நுழைந்து அங்கிருந்த மூன்று பேரை வெட்டிக் கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இரவு 07.30 மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், உயிரிழந்தவர்கள் 29, 34 மற்றும் 45 வயதுடையவர்களாவர்.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், ஏனைய இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

சட்டவிரோத மதுபான வியாபாரத்தில் ஈடுபட்ட இருதரப்பினரிடையே நீண்டகாலமாக நிலவி வந்த தகராறின் விளைவாக இந்தக் கொலை நடந்திருப்பது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நெல்லுக்கு உத்தரவாத விலை ரூ. 115 ஆளும்தரப்பினது பொய்கள் அம்பலம்

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. விசனம்

நெல்லுக்கானஉற்பத்திச்செலவு30சதவீதத்தையும் சேர்த்து 130 ரூபாவை நிர்ணயிப்பதாக தேசிய மக்கள் சக்தி கூறியது. ஆனால் 115 ரூபா நிர்ணய விலையாக அறிவிக்கப்படவுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. அவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டால் ஆளும்தரப்பின் வாக்குறுதிகள் முற்றிலும் பொய்யானவை என்பது நாட்டுக்கு வெளிப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



உற்பத்தி செலவுக்கு அப்பால் விவசாயிகளின் வாழ்க்கைச் செலவு பற்றியும் சிந்திக்கவேண்டும். நெல்லுக்கு 130 ரூபா நிர்ணய விலை அறிவிக்கப்படும் என விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு என்னவாயிற்று?

130 ரூபா நிர்ணய விலையை அமைச்சரவை தீர்மானிக்காவிட்டால் ஆளும்தரப்பின் மிகப் பெரிய பொய் மக்களுக்கு வெளிப்படுத்தப்படும். நெல் கொள்வனவுக்கு ஆளும்தரப்பினால் 5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் திறைசேரியிடமிருந்து இன்னும் பணம் பெற்றுக் கொள்ளப்படவில்லை. இந்த பில்லியனில் 40,000 மெட்ரிக் தொன் அரிசியை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும்.

40000 மெட்ரிக் தொன் அரிசியை கொள்வனவு செய்து ஜனாதிபதி கூறியதைப் போன்று பெரும் களஞ்சியசாலைகளை உருவாக்க முடியுமா? நுகர்வோரின் பிரச்சினையை விவசாயிகள் பக்கம் திருப்பி விடும் நடவடிக்கையையே ஆளும்தரப்பு முன்னெடுக்கவிருக்கிறது. ஆளும்தரப்புக் கூறிய முறைமை மாற்றம் இதுவா? ட்ரம்ப் கூறியதைப் போன்று தற்போது சகல மாற்றங்களையும் ஏற்படுத்தி விட்டார். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 3 மாதங்கள் கடந்தும் என்ன நடந்தது?

பொருளாதார மறுசீரமைப்பு சட்டத்துக்கு எதிராக ஜே.வி.பி. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. ஆனால் இன்று ஜனாதிபதி பொருளாதார மறுசீரமைப்பு சட்டம் சிறந்ததல்லவா என்று கூறுகின்றார். அமைச்சர்களான சுனில் ஹந்துனெத்தி மற்றும் ஹர்ஷண நாணயக்கார ஆகியோர் இந்த சட்டம் அரசமைப்புக்கு முரணானது என முன்னர் கூறினர். இன்று அவர்கள் எங்கு சென்றுள்ளனர்? இந்தச் சட்டத்துக்கமையவே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்கவிருக்கின்றார் என்றார்.

# சிறையிலுள்ள உறவுகளை பார்வையிட பெப். 4 வாய்ப்பு

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி 4ஆம் திகதி உறவினர்களை பார்வையிட சிறைக்கைதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த தினத்தில் கைதிகளின் உறவினர்கள் கொண்டு வரும் உணவு மற்றும் சுகாதாரப் பொருட்களை ஒவ்வொரு கைதிக்கும் போதுமான அளவில் வழங்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியாக உள்ள அனைத்து அனைத்து சிறைச்சாலைகளிலும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, கைதிகளை பார்வையாளர்களுக்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக சிறைச்சாலை ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் யாழ். பயணத்தில் விமானப் பயன்பாடு ஏதுமில்லை

## பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் யாழ்ப்பாண பயணத்தின்போது இலங்கை விமானப்படையின் மூன்று விமானங்கள் பயன்படுத்தப்பட்டதாக பரவிய உண்மைக்கு புறம்பான செய்தி தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு நேற்று பிற்பகல் ஒரு விளக்கத்தை வெளியிட்டது.

அதன்படி, கடந்த 31 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கான தனது பயணத்திற்காக ஜனாதிபதி இலங்கை விமானப்படை விமானங்களைப் பயன்படுத்தியதாக சமூக ஊடகங்களில் பரவும் செய்தி முற்றிலும் தவறானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்திற்கு இலங்கை விமானப்படையின் எந்த விமானமும் பயன்படுத்தப்படவில்லை என்றும், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாகனம் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது

# அணுசக்தி அதிகார சபைக்கு புதிய தலைவர் நியமனம்



இலங்கை அணுசக்தி அதிகார சபையின் புதிய தலைவராக கலாநிதி துஷாரா ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

எரிசக்தி அமைச்சின் பொறியியலாளர் குமார ஜெயக்கொடியால் குறித்த நியமனம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஜப்பானின் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற துஷாரா ரத்நாயக்க, அணு பொறியியலில் முனைவர் பட்டம் பெற்ற ஒரே இலங்கையர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மின் பொறியியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.


# யாழ். மாவட்டத்தின் சுற்றுலா வழிகாட்டி நூலை வெளியிட்டு வைத்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாண மாவட்டத்தின் கலாசார ரீதியான சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையங்கள் தொடர்பில் டிஜிற்றல் அடிப்படையிலான சுற்றுலா வழிகாட்டி நூல் வெள்ளிக்கிழமை ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வைத்து, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் முன்னிலையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்துப் பிரதேச செயலகங்கப் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் நூற்றுக்கு மேற்பட்ட கலாசார ரீதியான சுற்றுலா மையங்களை உள்ளடக்கிய வகையில் விஞ்ஞானரீதியான ஆய்வினூடாகவும், களத்தரிசிப்பினூடாகவும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால் தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நீண்ட நாள்களாக யாழ்ப்பாண மாவட்டத்தின் சுற்றுலா மையங்களையும் சுற்றுலாப்பயனிகளையும் இணைப்பதற்கான பிரதான சரியான பெறுமதிப்படுத்தப்பட்ட தகவல் நூல் இன்மையினால் சுற்றுலா அபிவிருத்தியில் அவை எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியதனை உணர்ந்து, இவ் பிரதான இடை வெளியை நிவர்த்தி செய்யும் நோக்கில் மாவட்டச்செயலகத்தால் பல்வேறு நூல்கள் மற்றும் கையேடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஓர் அங்கமாக மேற்படி நூல் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பயனுள்ள மாற்றத்தை நோக்கி...

பிரிட்டிஷ் குடியேற்ற நாடாக இருந்து ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து இலங்கை என்கிற நாடு சுதந்திரம் அடைந்ததன் 77 ஆண்டுகள் நிறைவடைகின்றன. நாளை மற்றொரு ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்கவுள்ளது. இதை குறைந்த ஆடம்பரத்துடன் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அதற்காக 80 மில்லியன் ரூபாவை மட்டுமே செலவிடப் போவதாகவும் ஆளும்தரப்பு அறிவித்துள்ளது. அதெல்லாம் சரிதான், ஆனால், மக்கள் தாம் உண்மையில் சுதந்திரம் பெற்றவர்களாக தம்மை உணரத் தலைப்பட்டுள்ளார்களா? பிரிட்டிஷார் வெளியேறிய பின்னர் தமிழ் மக்கள் தாம் சிறுமைப்படுத்தப்படுகின்றனர் என்கிற உணர்விலிருந்து இன்றுவரை வெளியேறவில்லை. மதச் சிறுபான்மையினரும் தாம் ஒடுக்கப்படுகின்றோம் ஒதுக்கப்படுகின்றோம் என்கிற உணர்விலிருந்து வெளிவரவில்லை. பௌத்த சிங்க மக்களோ தாம் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெறவில்லை என்கிற துயரத்துடனேயே நாட்களைக் கடத்துகின்றனர்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் தாம் என்ன பெற்றுள்ளார்கள் என்று இலங்கையர்கள் தம்மைத் நாமே கேட்டுக்கொள்ள வேண்டும், இன்று நாம் எங்கு நிற்கிறோம் என்பதை சுய மதிப்பீடு செய்ய அது உதவும். பிரச்சினைகளை நேர்மையாகவும் நீதியாகவும் நியாயமாகவும் தீர்த்துக்கொள்வதற்கும் அது பெரும் உதவியாக இருக்கும்.

இலங்கை இதுவரை இல்லாத ஓர் அரசியல் மாற்றத்தைக் கண்டுள்ளது. மக்கள் ஒரு முறைமை மாற்றத்தை எதிர்பார்த்து வாக்களித்தார்கள். அந்த வெற்றியை அடுத்தடுத்த தேர்தலிலும் தக்கவைப்பதற்குப் போராடும் தேசிய மக்கள் சக்தி, மக்களுக்குத் தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் அதே வேகத்தைக் காண்பித்தால் அது இலங்கையின் சுதந்திர தினத்திற்கு பயனுள்ளதாக அமையும்.

தற்போதைய ஆளும்தரப்பும் அதன் ஆதரவாளர்களும்கூட கடந்த 7G ஆண்டுகள் ஒரு 'சாபக்கேடு' என்பதை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆனால், அதை மாற்றும் திறனும் இலங்கையை எதிர்காலத்திலாவது 'சொர்க்கத்தில்' நிலைப்படுத்தும் முயற்சியை எடுக்கிறார்களாக என்கிற கேள்விக்கு அவர்களிடம் இருந்து ஆக்கபூர்வமான வெளிப்பாடுகள் குறைவாகவே உள்ளன.

பிரிட்டிஷாரிடமிருந்து விடுபட்டதும் இலங்கைத் தீவு தொடக்க காலத்தில் எட்டிய வளர்ச்சி மற்றும் குடிமக்களின் நலன்சார் விடயங்களில் தொடர்ந்து அடைந்திருக்கவேண்டிய இடத்தில் இல்லை என்பதை அனைவருமே ஏற்றுக்கொள்வார்கள். அதனை மாற்றுவதற்கான விருப்பத்தை மக்கள் கடந்த இரு தேர்தல்களில் வெளிப்படுத்திவிட்டார்கள். இலங்கையின் இன்றைய நிலைக்குக் கடந்த 75 வருடங்களில் காரணமானவர்கள் என்று அவர்கள் கருதியவர்களை விரட்டிவிட்டார்கள். புதிய யுகத்திற்கான அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவேண்டிய இடத்திலிருக்கும் புதிய ஆட்சியாளர்கள் மிக மெத்தனமாகவே செய்படுகிறார்கள் என்பது சுதந்திர தினத்தில் நல்ல செய்தியாக இல்லை.

இலங்கையர்களுக்கு உண்மையாக இருப்பது மற்றும் ஒருமித்த கருத்தை அடிப்படையாகக் கொண்ட பாதையை முன்னோக்கி உருவாக்குவது மிகவும் அவசியம். கடந்த காலத்தில் செய்தது போல் மீண்டும் மீண்டும் தடுமாற அனுமதிக்க முடியாது. குறிப்பாக, இலங்கையைச் சுற்றியுள்ள புவிசார் அரசியல் வேகமாக இயங்கி வருவதால், வரும் தசாப்தங்கள் அதனுடன் தொடர்புடைய பெரும் சவால்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும், அதற்கு முன்னர் உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்துவது அவசியம். இனங்களுக்கு இடையே நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்புவது கட்டாயம்.

கடந்தகால 'சாபக்கேடு' அரசியலில் இருந்து விடுபடவேண்டுமானால் தேசிய மக்கள் சக்தியும் தனது கடந்த கால அரசியல் தத்துவங்களில் இருந்தும் பிணைக்கப்பட்டுள்ள சிந்தனைகளில் இருந்தும் வெளிவருவது அவசியம். அதற்காகச் செய்ய வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. பொருளாதார மீட்சி மட்டுமே எல்லாவற்றுக்குமான தீர்வாக அமையாது என்பது உணரப்படவேண்டும். அதற்கான அரசியல் சூழல் தேவை என்பதும் தெளிவாகவேண்டும். பொருளாதார நிலைதன்மையை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்குச் சற்றும்–குறைவற்றதாக அரசியல் நிலைத்தன்மையை எட்டுவதற்கான முயற்சிகளும் முக்கியப்படுத்தப்படவேண்டும். இவை இரண்டுமே தண்டவாளத்தின் இருகரைகள். அவை சமச்சீராக முன்னெடுக்கப்படாத வரையில் நல்லவைகளும் தீர்வுகளும் சாத்தியமற்றவை.

இலங்கை ஒரு வலுவான தேசிய கொள்கைகளின் தொகுப்பை உருவாக்கவேண்டும். இது பரந்த ஆலோசனை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமித்த கருத்தை உருவாக்குவதன் மூலம் செய்யப்படவேண்டும். இனங்களிடையே நம்பிக்கையின் விரிவாகத்தை ஊக்குவிப்பதாக அமையவேண்டும்.

இவை எல்லாவற்றையும் செய்வதற்கு வெறும் வார்த்தை மாயங்கள் மட்டும் போதாது. அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகளும் தேர்தலுக்கு அப்பாலான அரசியல் அணுகுமுறையும் தேவை. இலங்கையர்களுடனும் அரசியல் சக்திகளுடனும் பொதுவான நிலையைக் கண்டறிய தயாராக இருக்க வேண்டும்.




## இந்தியாவுக்கு வங்கம் தரும் தலைவலி; பங்களாதேசில் மீண்டும் பாகிஸ்தான்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

1971க்குப்பிறகு முதல்முறையாக வங்கதேசத்துக்கு பாகிஸ்தான் ராணுவம் திரும்ப திட்டமிட்டுள்ளது. தற்போது புதிய ஆட்சியில் வங்காளதேச இராணுவத்தால் இந்திய எதிர்ப்புக் கோட்பாட்டை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக பாகிஸ்தான் இராணுவ பயிற்சிகள் உள்ளன என்று கூறப்படுகிறது.



### இந்திய பிராந்திய நலனுக்கு எதிராக:

தற்போது இந்தியாவின் பிராந்திய நலனுக்கு எதிராக 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக, பாகிஸ்தான் இராணுவம் வங்கதேசம் செல்ல உள்ளது. வங்கதேச இராணுவத்திற்கு பிப்ரவரி 2025 முதல் மைமென்சிங் கன்டோன்மென்ட் (னிதீதுளஜவிஷ்ஜஆஜு உழிஜமிலிஜதுளஜமி) மற்றும் பிற இடங்களில் பாகிஸ்தான் ராணுவத்தால் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் ஒரு பகுதியாக- கிழக்கு பாகிஸ்தானாகவே வங்கதேசம் 1971-ம் ஆண்டுக்கு முன்னர் வரை இருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு பாகிஸ்தானை பாகிஸ்தான் ராணுவம் ஒடுக்கி பல படுகொலைகளை செய்தது. இதனால் வங்கதேச தனிநாடு விடுதலைப் போரை முஜிபுர் ரகுமான் நடத்தினார். அவருக்காக பாகிஸ்தானுடன் இந்தியா யுத்தம் நடத்தியது.

1971-ம் ஆண்டு வங்கதேச விடுதலைக்காக பாகிஸ்தானுடன் இந்தியா நடத்திய யுத்தத்தால் தான் வங்கதேசம் என்ற ஒரு புதிய தனிநாடு உருவானது. அந்த யுத்தத்தில் பாகிஸ்தான் ராணுவ தளபதி தமது 93,000 பாகிஸ்தான் ராணுவ வீரர்களுடன் இந்தியாவிடம் சரணடைந்தார். உலக யுத்த வரலாற்றிலேயே 93,000 வீரர்கள் சரணடைந்தது வங்கதேசத்தில் இந்தியா நடத்திய யுத்தத்தில்தான்.

அப்போது நடந்த போரில் பல்லாயிரக்கணக்கான



மக்கள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானை வரலாற்று ரீதியாக பகைமை கொண்ட வங்கதேசம், தற்போது இந்த பயிற்சி ஒத்துழைப்பு ஒப்பந்தம் இந்தியாவிற்கு எதிரானதா எனும் கவலைகளை எழுப்பியுள்ளது. வங்கதேச இடைக்கால அதிபர் யூனுஸ் ஆட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஒப்பந்தத்தின் படி, பாகிஸ்தானைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் தரவரிசை அதிகாரிகளால் இந்த பயிற்சி நடத்தப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக இந்திய அரசுக்கு எச்சரிக்கை மணி அடிக்கும் வகையில் பாகிஸ்தான் ராணுவம் வங்கதேசத்துடன் பிப்ரவரி 2025 முதல் தனது ராணுவத்திற்கு பயிற்சி அளிக்க ஒப்பந்தம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரியில் மைமென்சிங் கன்டோன்மென்ட்டில் தொடங்கி பங்களாதேஷ் இராணுவத்தின் நான்கு மாநிலங்களில் பயிற்சி நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் இராணுவத்தின் பயிற்சி மற்றும் கோட்பாடு கட்டளை தலைமையகமாக மைமென்சிங்கில் உள்ளது. பாகிஸ்தானில் இருந்து வரும் மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள் வங்கதேச ராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கலாம் என ஆதாரங்கள் கூறுகின்றன.

### இஸ்லாமாபாத்துடன் புதிய உறவு :

இஸ்லாமாபாத்துடன் உறவுகளை மேம்படுத்த தற்போதைய யூனுஸ் ஆட்சியின் முயற்சியின் பின்னணியில் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் இராணுவங்களுக்கு இடையிலான ஒத்துழைப்புக்கான இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.

பாகிஸ்தான் ராணுவத்தால் வழிநடத்தப்படும் முதல் பயிற்சித் தொகுதி ஒரு வருடம் நீடிக்கும். பாகிஸ்தான் ராணுவத்தின் கூட்டுப்படைத் தலைமை ஜெனரல் எஸ் சம்ஷாத் மிர்சாவால் வங்காளதேசத்திற்கான ராணுவ பயிற்சி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வங்காளதேசத்தில் இராணுவ அதிகாரிகள் மற்றும் அவாமி லீக் ஆட்சியின் கீழ் பல ஆண்டுகளாக இந்திய ஆதரவு சித்தாந்தத்துடன் வங்காளதேச இராணுவத்தின் போதனைக்கு எதிராக தற்போதய



நிலமை அச்சத்தை எழுப்பியுள்ளது.

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற அதிகாரிகள், 1971 இல் வங்க நாடு சுதந்திரம் அடைய முதல் இரண்டு தசாப்தங்களாக பங்களாதேஷ் இராணுவத்தில் தலைமைப் பதவிகளை வகித்தனர். இந்த பட்டியலில் ஜெனரல் ஜியாவுர் ரஹ்மான் மற்றும் லெப்டினன்ட் ஜெனரல் எச்.எம். எர்ஷாத் ஆகிய இருவரும் ஜனாதிபதிகளாக பதவியேற்றனர்.

ஆயினும் முன்னாள் அதிபர் எர்ஷாத் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார். இந்தியாவில் உள்ள அரசியல் தலைமையுடன் நல்ல தொடர்புகளைப் பேணி வந்தார்.

தற்போது புதிய ஆட்சியில் வங்காளதேச இராணுவத்தால் இந்திய எதிர்ப்புக் கோட்பாட்டை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக இந்தப் பயிற்சிகள் உள்ளன என்று கூறப்படுகிறது.

அதேவேளை வங்கதேச அரசால் அவாமி லீக் மற்றும் ஷேக் ஹசீனா ஆகியோருக்கு நெருக்கமானவர்கள் என்று கருதப்பட்ட பங்களாதேஷ் இராணுவத்தின் தலைமை தற்போதைய ஆட்சியால் குறிவைக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

## இந்தியாவுக்கு...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

பங்களாதேஷில் பாகிஸ்தான் ராணுவம் இருப்பது நிலத்தால் சூழப்பட்ட வடகிழக்கு இந்திய மாநிலங்களுக்கு சவாலை உருவாக்கி உள்ளது.



### சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை:

வங்கதேசத்தில் இடைக்கால அரசு ஒன்று அமைந்த போதும் இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிரான அட்டூழிய வன்முறைகள் வெறித்தனமாக தலைவிரித்தாடுகிறது.

இந்து கோவில்கள் தாக்கப்படுவதும் இந்து அதிகாரிகள் அரசு பதவிகளில் இருந்து விரட்டியடிக்கப்படுவதும் தொடருகிறது.

கடந்த ஆண்டு ஆட்சி மாற்றத்தின் விளைவாக வங்கதேசத்தின் விடுதலைக்காக போராடிய வங்க தேசத்தின் தந்தை முஜிபுர் ரகுமானின் சிலையை தகர்தனர்.

அத்துடன் வங்கதேச விடுதலைக்கான யுத்தத்தின் சரித்திர சாட்சியாக இருந்த சிலையையும் வன்முறையாளர்கள் தகர்த்துள்ளனர். உலக யுத்த வரலாற்றிலேயே 93,000 வீரர்கள் சரணடைந்தது வங்கதேசத்தில் இந்தியா நடத்திய யுத்தத்தில்தான்.

இதனை வெளிப்படுத்தும் வகையில் தலைநகர் டாக்காவில் சிலை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. வங்கதேசத்தில் மதவெறியர்கள் கை ஓங்கி இருக்கும் நிலையில் டாக்காவில் உலக யுத்த வரலாற்றின் பெருமிதமிக்க சாட்சியாக இருந்த இந்த சிலையும் தகர்க்கப்பட்டுள்ளது.

இந்திய எதிர்ப்பாளர்கள்தான் இத்தகைய நாசகார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என பலர் கருதுகின்றனர். இந்திய கலாசார மையம், கோவில்கள், இந்துக்களின் வீடுகளைத் தகர்த்தவர்கள் இப்போது 1971-ம் ஆண்டு யுத்தத்தை நினைவூட்டும் சிலையையும் தகர்த்துள்ளமை இந்திய விரோதப் போக்கை வெளிப்படுத்துகிறது.



# எலிக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனிகள்

(பாறுக் ஷிஹான்)

எலிக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி வெள்ளிக்கிழமை மத்திய முகாம் நகரில் ஆரம்பமானது.







குறித்த நடைபவனியானது சதுர்த்தி வங்கி அருகில் ஆரம்பித்து மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலையில் இடம் பெற்றதுடன் எலிக்காய்ச்சல் தொடர்பிலான விழிப்புணர்வு உரையுடன் நிறைவுற்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஐ. எம். முஜீப் உள்ளிட்ட ஊழியர்கள், நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளர் பீ. சதீஸ் கரன் உள்ளிட்ட ஊழியர்கள், மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் இசுரு கொடிகார, நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் அதிகாரிகள், மத்திய முகாம் ஜீ. எம். எம். எஸ். பாடசாலை அதிபர் பிரதி அதிபர் ஆசிரியர்கள் மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள், மற்றும் மத்திய முகாம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், அன்னமலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகளும், பொதுமக்களும் பங்கு கொண்டனர்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கருத்து தெளிவூட்டல் வழங்கப்பட்டமை ஒரு சிறப்பம்சமாகும்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# புரியாத புதிராக நீதித்துறை வாழ்வு முடிவுறுகிறது மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் ஆதங்கம்

புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுறுகிறது என வவுனியா மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில், வவுனியா ஈரப்பெரியகும் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் சனிக்கிழமை ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியாவில் நீதிவானாக 9 ஆண்டுகள், வவுனியாவில் மேல் நீதிமன்ற நீதிபதியாக 3 ஆண்டுகள் கடமை புரிந்துள்ளேன். திருகோணமலையில் 2008- 2010 இல் மேல் நீதிமன்ற ஆணையாளராகவும், மீண்டும் 2012 - 2014 இல் திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராகவும், 2018-2022 மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் 8 ஆண்டுகள் திருகோணமலையில் கடமை புரிந்துள்ளேன்.

கல்முனையில் ஒன்றரை ஆண்டுகள் மாவட்ட நீதிபதியாகவும், ஒன்றரை ஆண்டுகள் மேல் நீதமன்ற நீதிபதியாகவும் என 3 ஆண்டுகள் கல்முனையில் கடமையாற்றியுள்ளேன்.

நான் பிறந்த மண் யாழ்ப்பாணத்தில் 2015-2018 வரை மூன்றரை ஆண்டுகள் மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றியுள்ளேன். மட்டக்களப்பில் சிவில் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக ஓராண்டு கடமை புரிந்துள்ளேன்.

எனது முதல் நியமனம் வவுனியா நீதிவான் நீதிமன்றம். வவுனியாவில் மேல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபட நீதிச்சேவை ஆணைக்குழுவால் 40 நாள்கள் நியமிக்கப்பட்டு, அதன் பின் மன்னார் மாவட்ட நிரந்த நீதிவானாக சென்று 1997-2000 ஆண்டு வரை 3 ஆண்டுகள் கடமையாற்றி மீண்டும் வவுனியாவிற்கு நீதிவானாக வந்தேன்.

தீர்ப்புக்கள் பற்றி நான் பேச விரும்பவில்லை. அது என்னுடைய கடமை. இருப்பினும் வருகின்ற 05.02.2025 இல் எனது 28 ஆண்டுகள் நீதிச்சேவை சேவைகள் முடிவுறுத்தப்படவுள்ளது. முதல் நிலை நீதிமன்ற நீதிபதியாக எனது நீதிச் சேவை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால், மேல் நீதிமன்ற நீதிபதிகள் 90 பேர் இருக்கிறார்கள். அதில் முதலாவது இலக்கத்தில் நான் இருக்கின்றேன். 12.12.2024 இல் உயர் நீதிமன்ற தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. அனைத்து தடைகளும் விலக்கப்பட்டன. 12.01.2025 இல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்து 4 நீதிபதிகள் உயர் நீதிமன்றத்திற்காக பதவி உயர்த்தப்பட்டார்கள். மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் 4 வெற்றிடங்கள் உள்ளன.

12.01.2025 இல் இருந்து அதற்கு தகைமையானவன் நான். நான் தகைமையாலும், இலக்கம் 1 இன்றில்



இருப்பதாலும் நான் தகுதியானவன். எனது பிறந்த தினம் 20.01 ஆகும். மேல் நீதிமன்றம் 61 வயதை அடையும் போது முதல்நிலை நீதின்றம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

காலத்தின் சோதனை முடிவு இறுதிப்படுத்தப்படவில்லை எனவும் கூறுகிறார்கள். இறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் கூறுகிறார்கள். 28 ஆண்டுகள் கடமை புரிந்தேன். புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுகிறது.

வேதனையா, சோதனையா, சாதனையா எதுவும் புரியவில்லை. அனைத்தும் நல்லதிற்கே என் மனதை திருப்திப்படுத்தக் கூட முடியவில்லை. ஆனால் இன்று பெருவிழாவை வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் ஒழுங்கமைத்து வடக்கு - கிழக்கு நீதிபதிகள், சட்டத்தரணிகள் இங்கு வருகை தந்ததையிட்டு உங்கள் நன்றி உணர்வை மதிக்கிறேன். நீங்கள் அருகில் நிற்கும் போது எனக்கு புத்துணர்வு வருகிறது. இன்னும் சாதிக்க வேண்டும். சாதனைகள் புரிய வேண்டு என்ற உணர்வு உள்ளுணர்வாக கிளம்புகின்றது.

இருப்பினும், சந்தோசமாக போவதற்கு நான் தயார். ஆனால் 2024 மே மாதம் 13 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிபதியாக நான் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். வழக்குகள், தடையுத்தரவுகள் காரணமாக பின்னுக்கு சென்று வீடு செல்வதற்கு 8 நாள்கள் இருக்கின்ற நிலையில், நமது தலைவர் சீனா புறப்பட்டார். ஞாயிறுக்கிழமை உயர் நீதிமன்ற சத்திய பிரமாணம் இடம்பெறுகிறது.

12.01.2025 ஞாயிற்றுக்கிழமை. 13 ஆம் திகதி திங்கள் போயா. 14 ஆம் திகதி செவ்வாய் பொங்கல். திங்கள் இரவு ஜனாதிபதி சீனா பயணம். வெள்ளிக்கிழமை இரவு சீனாவில் இருந்து திரும்பி வந்தார். 18,19 விடுமுறை நாள். 19.01.2025 அன்று எனது இறுதி நாள். காலதாமதத்திற்கு நான் காரணமல்லன். காலதாமதம் என்னை ஓய்வு எடுக்க அனுப்பியது. காலதாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதி என்று நான் பல இடங்களில் பேசினேன். அந்த நீதி என் மீதும் தொடுக்கப்பட்டுள்ளது. எதையும் ஏற்றும் கொள்ளும் மனபாவம் வர வேண்டும்.

எனக்கு என்னை பற்றி பெரிதாக கவலையில்லை. எனது இரு குழந்தைகள், குடும்பத்தினர், உறவினர்கள், அவர்கள் வேதனைப்படுவது தான் கவலை. வீடு வேதனைப்படுகிறது. கண்முன்னே அனைத்தும் நடைபெறுவதை அனைவரும் பார்க்கிறார்கள். நீதி கேட்டு எங்கும் செல்ல முடியாத நிலைமை.

நீதிவான், மாவட்ட நீதிபதி, மேல் நீதிமன்ற நீதிபதி தலைவணங்காத ஒரு தொழில். அதற்கு மேல் செல்ல வேண்டுமானால் தலைகளும் ஒரு கணம் வணங்கும். அவைகளால் தான் இலக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன. இதுவரை என்னுடன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அமைச்சரோ கதைத்ததில்லை. இப்பொழுதும் அனைவரும் எனக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கிறார்கள் இது தான் நிலைமை.

எனவே, இந்த நிகழ்வுக்கு வருகை தந்த நீதிபதிகள், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்தி கலந்து கொண்ட அனைத்து சட்டத்தரணிகளும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (100)






# நீதிபதி இளஞ்செழியனின் சேவை நலன் பாராட்டு விழா

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் மா.இளஞ்செழியன் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில், வவுனியா ஈரப்பெரியகும் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் சனிக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக ஏ9 பிரதான வீதியில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க மாலை அணிவித்து நீதிபதி மா.இளஞ்செழியன் வரவேற்கப்பட்டதுடன், அவரது 27 வருட நீதித் துறை சேவையை பாராட்டி வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்து வருகை தந்த மேல் நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள், வடக்கு - கிழக்கைச் சேர்ந்த சட்டத்தரணிகள் எனப் பலரும் அவரது சேவையை பாராட்டி கௌரவிப்புக்களை வழங்கியிருந்தனர்.

நீதித்துறையில் 27 வருடத்தை பூர்த்தி செய்த முதல் தமிழ் நீதிபதியாக கடமையாற்றிய மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில் அரசாங்கத்தின் இழுத்தடிப்புகளாலும், கால தாமங்களாலும் அவர் ஓய்வு நிலைக்கு செல்கின்றார். இருப்பினும் அந்த பதவி நீதிபதி மா.இளஞ்செழியன் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனப் பலரும் இதன் போது கருத்து தெரிவித்தனர். (100)











# வடமராட்சியில் இறந்தபடி கரையொதுங்கிய ஆமைகள்

யாழ். வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சில நாள்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கின.

இந்தநிலையில்வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியிலுள்ள மூன்று ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

கடலின் சீற்றம் காரணமாக கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால்காயமடைந்த ஆமைகள் உயிரிழந்து கரையொதுங்குவதாகஅப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆமைகளை பிடிப்பதும், இறைச்சிக்காக பயன்படுத்துவதும் சட்டவிரோதம் என்பதால் கரையொதுங்கிய ஆமைகள் இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் துர்நாற்றம் வீசக்கூடிய நிலையிலும் உருக்குலைந்து காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# ஜீவன் தொண்டமான் நேரில் தலைவர் மாவைக்கு அஞ்சலி

(கேதீஸ்)

மறைந்த இலங்கை தமிழரசுக் கட்சியின்மூத்ததலைவரும், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினருமானமாவை சேனாதிராஜாவின் பூதவுடலுக்கு இ.தொ.கா பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானஜீவன்தொண்டமான் இறுதி அஞ்சலி செலுத்தினார்.



யாழ்ப்பாணம் காங்கேசந்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சென்று மாவை சேனாதிராஜாவின் பூதவுடலுக்கு மலர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்திய ஜீவன் தொண்டமான், அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் அனுதாபங்களை தெரிவித்துக்கொண்டார்.







காலைக்கதிர் Kalaikkathir

## போரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா' செயற்திட்டத்துக்காக நிதி ஒதுக்கப்படும். அத்துடன் மக்களுக்கும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்படும். சமூகக்கட்டமைப்பில்காணப்படும்அடிப்படைப் பிரச்சினைகளுக்கு கட்டம் கட்டமாகத் தீர்வு பெற்றுக்கொடுப்போம்.

நாடுபொருளாதாரரீதியில்பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரச செலவுகள் இயலுமான வகையில் குறைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாதுகாப்பு உட்பட செலவுகள்குறைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில்தான் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டு, வழங்கப்பட்ட அரச இல்லங்களை மீளப்பெறப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க, கோட்டபய ராஜபக்ச ஆகியோர் நாகரீகமான முறையில் அரச இல்லத்தில் இருந்து வெளியேறியுள்ளார்கள். ஆனால் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, சந்திரிக்கா பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இன்றும் அரச இல்லங்களில்தான் உள்ளார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச போரை முடித்தார் என்பதற்காக அவரைத் தோளில் சுமந்துக்கொண்டு திரிய முடியாது. அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளார்கள். தமது பெற்றோரை பிள்ளைகள்தான் பார்த்துக்கொள்ளவேண்டும். மஹிந்த ராஜபக்சவைப் பார்த்துக்கொள்வதற்கு அவரது மூன்று பிள்ளைகளுக்கும் முடியாவிடின் அவருக்கும், அவரது பாரியாருக்கும் வீடு வழங்கலாம். ஆனால் அவரது மூன்று பிள்ளைகளையும் ஆளும்தரப்பால் பராமரிக்க முடியாது என்றார்.

## புலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவடைந்துள்ளன. பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர்த்து வேறு எந்தத் திட்டத்தையும் ஆளும்தரப்பு அறிமுகப்படுத்தவில்லை. கடந்த காலங்களில் விமர்சித்த பொருளாதார மற்றும் அரச கொள்கையை எவ்வித மாற்றமுமில்லாமல் ஜனாதிபதி முன்னெடுக்கிறார்.

சந்தையில் அரிசி மற்றும் தேங்காய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளன. மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றி ஆளும்தரப்புக் கவனம் செலுத்தவில்லை. மாறாக முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் குறைத்து அரச இல்லங்களை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைபுலிகளின்ஆதரவாளர்களையும், புலம்பெயர் அமைப்புக்களையும் திருப்திப்படுத்துவதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆளும்தரப்பு பழிவாங்குகிறது. ஏனைய ஜனாதிபதிகளுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஒப்பிட முடியாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை அரச இல்லத்தில் இருந்து வெளியேறுமாறு ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறார்கள். ஆனால் இதுவரையில் மகிந்த ராஜபக்சவை அரச இல்லத்தில் இருந்து வெளியேறுமாறு ஆளும்தரப்பு உத்தியோகபூர்வமான கடிதத்தை அனுப்பவில்லை. முடிந்தால் உத்தியோகபூர்வ அறிவிப்பை எழுத்துமூலமாக விடுக்கவேண்டும் என்ற சவாலை முன்வைக்கிறேன் – என்றார்.

## கொள்கலன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர். இதன் மற்ற உறுப்பினர்கள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் இ.எம்.எஸ்.பி. ஜயசுந்தர, வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.கே.பி. குமார, முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.பி குரும்பலாபிட்டிய மற்றும் சிரேஷ்ட சுங்க பணிப்பாளர் சபுமல் ஜயசுந்தர ஆகியோர் பணிபுரிகின்றனர்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் துறையின் இயக்குநர் டாக்டர் விஷாகா அலபடா, குழுவின் செயலாளராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகிறார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்டார் – என்றார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்ததாவது:

சேனாதிராசாவின் மறைவானது தமிழ்த் தேசியம் என்ற தொடருந்தின் இறுதிப்பெட்டியாக இருப்பது போன்ற கருத்துநிலை எனக்குள் உள்ளது. மாவை.சேனாதிராசா இறுதியாக என்னுடன் சம்பந்தன் அவர்களின் இறுதி அஞ்சலி உரையினை மையப்படுத்தி உரையாடினார். அந்த உரையில் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சுட்டிக்காட்டி அரசியல் தீர்வு விடயத்தில் சம்பந்தன் கொண்டிருந்த நம்பிக்கையை அவர் வீணடித்துவிட்டார் என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதனைத் தொடந்து சேனாதிராசா என்னை தொடலைபேசியில் அழைத்து உரையாடியதோடு நீங்கள் சொன்ன விடயம் மிகவும் முக்கியமானது. மிகச் சரியானது என்று கூறியிருந்தார். அவர் எப்போதும் மென்மையான பக்குவமான தலைவராகவே இருந்தார்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், மலையக மக்கள் உள்ளிட்ட அனைவரையும் உள்ளடக்கியதுதான் இலங்கைத் தமிழ்த் தேசியம் என்பதில் உறுதியாக இருந்தார். அவருடைய கூற்று மிகவும் உண்மையானது.

வடக்கு கிழக்கில் தமிழ்த் தலைவர்கள் பலமாக இருக்கும்போதுதான் தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்காக செயற்படும் நாம் பலமாக இருக்க முடியும். ஆகவே அவருடைய தீர்க்கமான சிந்தனையை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்ததாவது:

நான் எந்தவொருவரின் இறுதிக் கிரியைகளிலும் கலந்துகொள்வது கிடையாது. ஆனால் மாவை.சேனாதிராசா ஐயா அவர்களின் நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது என்று உணர்ந்தேன்.

அவர் எப்போதும் மலைய மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவர் என்பதோடு எனது தந்தையார் மறைந்த ஆறுமுகன் தொண்டமானுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டவராகவும் இருந்தார்.

அதுமட்டுமன்றி, நான் அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் வடக்கு மக்களின், கிழக்கு மக்களின் நீர்ப் பிரச்சினை பற்றி உரையாடுவதற்காக என்னைச் சந்திக்கவேண்டும் என்று அடிக்கடி கேட்டுக்கொள்வார். அவர்களின் பிரச்சினைகள் பற்றிய விளக்கத்தினையும் அளிப்பார்.

அவ்விதமாக மக்களுக்காகப் பணியாற்றிய ஒருவர் இப்போது எம்மை விட்டுச் சென்றுள்ளமையானது மிகப்பெரும் இழப்பாகும். அவரை மரியாதை செய்து எமது கட்சி ஆழ்ந்த அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கின்றது – என்றார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியூதீன் தெரிவித்ததாவது:

புத்தளத்தில் முஸ்லிம்கள் அகதிகளாக தங்கியிருந்த காலத்தில் இருந்து மாவை சேனாதிராசா என்னுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார்.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத் துக்காக நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது அதற்கான தனது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவார் என்று என்னிடத்தில் நேரடியாகவே தெரிவித்து வந்தார்.

அத்துடன், எப்போதும், தம்பி என்று அழைத்து பல்வேறு விடயங்கள் பற்றியும் உரையாடுவார். அவருடைய சிந்தனை மக்களை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும் – என்றார்.

## மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரி வெளிநாட்டில் தங்கியுள்ளார்.

அசாத் மௌலானா, சுயவிருப்பின் பேரில் நாடு திரும்பி தாமாக முன்வந்து உயிர்த்த ஞாயிறு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவிருப்பதாக சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

## போலித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்நாயக்க கூறினார்.

போலி தகவல் தொடர்பில் ஆராய்வதற்காக பொலிஸ் கணினி குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் ஆணைக்குழுவில் தொழில் வெற்றிடங்கள் காணப்படுவதாக குறிப்பிட்டு பரப்படும் லிங்குகளுக்குள் பிரவேசிக்கவோ, அவற்றை பகிரவோ வேண்டாமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

## சுதந்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெப்ரவரி 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் கட்டடங்களை மின் விளக்குகளால் அலங்கரிக்கவேண்டும் என்றும் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், மின்சார பாதுகாப்பு மற்றும் மின் அலங்காரச் செலவு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் பிரதிநிதித்துவங்களைக் கருத்தில்கொண்டு, மின்விளக்குகளால் கட்டடங்களை அலங்கரிக்கும் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

# திராட்சைப்பழம் மற்றும் தோடம் பழங்கள் பழுதடைந்தவை கைப்பற்றப்பட்டு அழிப்பு

*(பாறுக் ஷிஹான்)*

*அம்பாறை மாவட்டம் கல்முனை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பழுதடைந்த திராட்சை, தோடம் பழங்கள் உள்ளிட்ட பழவகைகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.*



*மனித பாவனைக்கு தீங்கு விளைவிக்கும் குறித்த பங்கசு படர்ந்த திராட்சை பழங்கள் அழுகிய தோடம்பழங்கள் உள்ளிட்ட பழவகைகள் யாவும் சனிக்கிழமை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.*



*சனி முற்பகல் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பழுதடைந்த பழங்கள் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படுகின்றன என கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளருக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.*

*குறித்த முறைப்பாட்டிற்கமைய செயற்பட்ட பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சென்ற பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் பெருந்தொகைஷ்யான பழுதடைந்த திராட்சை பழங்கள் தோடம்பழங்கள் உள்ளிட்ட பழங்களை மீட்டுள்ளதுடன் அவை அழிக்கப்பட்டன.*

*மேலும் இந்நடவடிக்கையை முன்னெடுத்த சுகாதார அதிகாரிகள் குறித்த திராட்சை பழங்கள் மற்றும் ஏனைய பழங்களை வீதியோரங்களில் விற்பனை செய்த நபர்களை எச்சரிக்கை செய்து அனுப்பினர்.*

*குறித்த பழ வகைகள் யாவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் வெளிமாவட்டங்களில் விற்பனைக்காக இங்கு கொண்டுவரப்பட்டுள்ளமை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.*




# ஊடகவியலாளர் வசந்த சந்திரபாலவின் உயிரோட்டமான புகைப்படக் கண்காட்சி

(பாறுக் ஷிஹான்)

சிரேஷ்ட ஊடகவியலா ளரும் புகைப்பட கலைஞருமான வசந்த சந்திரபாலவால் கடந்த ஜனவரி மாதம் 29 ,30, 31 மற்றும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இரவு 10.00 மணி வரையும் அம்பாறை நகர மண்டபத்தில் கடந்த நான்கு நாள்களாக நடைபெற்ற புகைப்படக் கண்காட்சி பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.








கடின முயற்சியுடன் கூடிய அர்ப்பணிப்புடன் அழகிய முறையில் ஒவ்வொரு புகைப்படங்களையும் ஆவணமாக்கிவாசகர்களின்பாராட்டினை அவர் பெற்றிருக்கின்றார்.

இவர் அம்பாறை மாவட்டத்தை வதிவிடமாக கொண்டுள்ளதுடன் 30வருடகால அனுபவமுள்ள உள்நாட்டு போரில் பல்வேறு சாட்சிகளை கொண்ட ஊடகவியலாளர் ஆவார்.

அத்துடன் போர் கால செய்திகளின் ஊடாக தான் பெற்ற அனுபவங்களை எதிர்காலத் தலைமுறையினருக்குக் கடத்தும் நோக்கில் கண்ணீரால்கழுவப்படாத நினைவுகள்(කඳුළින් නොසේදුණු මතක) என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை இங்கு வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளார்.



சிரேஷ்ட ஊடகவியலாளர்வசந்த சந்திரபாலகடந்தபல வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் பல அனுபவங்களுடன் சிறப்பாக செயற்படுவதுடன் அவர் சிறந்த தத்துரூபமானபுகைப்பட கலைஞர் ஆவார்.இலங்கையில் பிரபலமான தொலைக்காட்சிகளான ஹிரு, அத தெரண தொலைக்காட்சிகளில் பிராந்திய செய்தியாளராகவும் செயற்பட்டு வருவதுடன் தேசிய பத்திரிகைகள் வானொலி இணையங்களிலும் ஊடகவியலாளராக செயற்படுகின்றார்.

குறித்த கண்காட்சியில் இறைவனின் படைப்புகளில் உள்ள ஒவ்வொரு விநோதங்களையும் ஒரு வில்லை ஊடாக ஒவ்வொரு புகைப்படங்களும் அவரது ஆற்றலையும் புதிய யுக்திகளையும் கொண்டு உயிரோட்டமாக மிளிர்கின்றன. இயற்கையான காடுகளில் உள்ள மிருகங்கள் பறவைகள் அவற்றின் வாழ்விடங்கள் முதல் அவற்றின் ஒவ்வொரு அசைவுகளையும் ரசித்து அழகாக புகைப்படமாக்கி ஆவணப்படுத்தியுள்ளமை இக்கண்காட்சியின் சிறப்பம்சமாகும்.

இதே வேளை பொழுது போக்கிற்காக பல்வேறு விலங்குகள் மற்றும் பறவைகளை வனவிலங்கு சரணாலயங்களுக்குச் சென்று தனிமனிதனாக நின்றும் இரவு நேரங்களில் கூட அழகிய முறையில் புகைப்படங்கள் எடுத்திருக்கின்றார்.

இக்கண்காட்சியில்பார்ப்பதற்கு அரிய பறவைகள் விலங்குகள் உள்ளிட்டவைகளைக் கூட அருமையாக பல்வேறு சந்தர்ப்பங்களில் புகைப்படமாக்கப் பட்டுள்ளதுடன் பார்வையாளர்களின்பாராட்டையும் பெற்றிருக்கின்றன.

இவ்வாறான பல அரிய புகைப்படங்களை சிறந்த அழகிய உள்ளுணர்வுடன் மிகுந்த கடின முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் ஆவணமாகி உள்ள சிறந்ததத்துரூபமானபுகைப்பட கலைஞரும் ஊடகவியலாளருமான வஸந்த சந்திரபாலவின் கண்காட்சியை அம்பாறைபிரதேசநூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் உட்பட பல தரப்பினரும் பார்வையிட்டு பாராட்டி வருகின்றனர்.

மேலும் கல்முனை மற்றும் சம்மாந்துறை பிரதேசங்களில் இப்புகைப்பட கண்காட்சி நடத்துவதற்கான ஒழுங்குகளை சிரேஷ்ட ஊடகவியலாளரும் புகைப்பட கலைஞருமான வசந்த சந்திரபால மேற்கொண்டுள்ளார்.

## சாய்ந்தமருது பிரதேச சமூக அபிவிருத்தி அமைப்பின் 2 ஆண்டு நிறைவில் கற்றல் உபகரணங்கள் வழங்கல்!

(நூருல் ஹுதா உமர்)



சாய்ந்தமருது பிரதேச சமூக அபிவிருத்தி அமைப்பின் இரண்டாவது ஆண்டு நிறைவும் கற்றல் உபகரணங்கள்



வழங்கும் நிகழ்வும் அமைப்பின் தலைவர் ஐ. ஜாபீர் தலைமையில் சாய்ந்தமருது ரியாலுல்ஜன்னா வித்தியாலய கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பொலன்னறுவை மாவட்ட சிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார். கௌரவ அதிதிகளாக இன்ஜினியரிங் கன்சல்டன்சி இன்நிறைவேற்று பணிப்பாளர் எம்.யூ.எஸ். நியாஸ் மற்றும் வரவ்ன் வூட் ரெசிடன்ஸ் உரிமையாளர் எம்.எச். முகம்மட் நாசர் ஆகியோர்கலந்துகொண்டனர்.

நிகழ்வுக்கு விசேட அதிதிகளாக கேபிடல் எவ்.எம். சிரேஷ்ட முகாமையாளர் ஏ.எல்.ஜாபீர், பிறை எவ்.எம். ஏ. ஆர்.எம். நௌபீல், ; நிறைவேற்றுபணிப்பாளர் ஏஜி. இக்பால் மற்றும் சாய்ந்தமருது சமூக சேவை உத்தியோகத்தர் ஏ. ஆர். ரேஷ்மி மற்றும் எம்.யூ.எஸ். நிஜாம் ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.



மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் களைகட்டிய நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.



காலைக்கதிர்
Kalaikkathir

# கல்முனை மாநகர சபையினால் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம்

(பாறுக் ஷிஹான்)

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகரசபைஎல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் திண்மக் கழிவுகளை பூரணமாக அகற்றுதல் மற்றும் கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி தலைமையில் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்ஏ.ஆதம்பாவாவின் பங்குபற்றலுடன் ஆரம்பமானது.

இதன்முதல்கட்டமாகசாய்ந்தமருதில் இவ்வேலைத்திட்டம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டு திண்மக் கழிவுகளைபூரணமாகஅகற்றப் பட்டதுடன் கடற்கரை பிரதேசமும் சுத்தம் செய்யப் பட்டன.

இவ்வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப் பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா, உதவி ஆணையாளர் ஏஎம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எம்.ஜௌசி உள்ளிட்ட மாநகர சபையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி இதன் போது நன்றிகளை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கல்முனை மாநகர சபைக்குட்பட்ட ஏனைய பிரதேசங்களிலும்இவ்வேலைத் திட்டம் தொடராக முன்னெடுக்கப்படும்எனவும் மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி மேலும் தெரிவித்தார்.









# காற்றுவெளி மின்னிதழின் மாசி மாத இதழ் வருகிறது


காற்றுவெளி மின்னிதழின் மாசி மாத இதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது.

காற்றுவெளி தொடர்ந்து வருவதற்கு படைப்புக்களை அனுப்பி உதவியோர்க்கு என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

சந்தா அனுப்ப விரும்புவோர் இதழின்உள்ளே விவரம் உள்ளது.

மேலும், காற்றுவெளி இங்கிலாந்து சிறப்பிதழின் அச்சுப்பதிப்பினை பெறவிரும்புவோர்

தொடர்பு கொள்ளுங் கள்.(தனி இதழ் £4.00 + தபால்செலவு தனி)




இதழ்பற்றியகருத்துக்களை தருவதுடன்,நன்பர்களுடனும் பகிருங்கள்.

# சிறுவர்களுக்கு எதிரான பாலியல் அடிப்படையிலான வன்முறைகளை கையாளும் திறன்பயிற்சி கந்தளாயில்

(ஹஸ்பர்)



பெண்கள்,சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறும் பாலியல் வன்முறைச் சம்பவங்களின் போது அதனை அணுகுவதற்கான செயல் முறை நிகழ்வொன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக கந்தளாயில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வானது திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஒத்துழைப்புடன்திருகோணமலையில் இயங்கி வரும் பெண்களுக்கான சுதந்திர அமைப்பான ஈ - விங் ஏற்பாடு செய்திருந்ததுடன் குறித்த திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி பங்களிப்பில் ஆசிய பவுண்டேசன் மற்றும் தேவை நாடும் மகளிர் ஆகியண இணைந்து அமுல்படுத்திவருகிறது. இதில்திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த கந்தளாய், சேருவில, தம்பலகாமம், மூதூர் ஆகிய பொலிஸ் நிலையங்களில் பெண்கள், சிறுவர் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறும் வன்முறைச் சம்பவங்களை பாலின அடிப்படையில் எவ்வாறு கையாள்வது மற்றும் பெண்களை வலுப்படுத்தல் அதன் அணுகு முறை தொடர்பிலும் பல விரிவான விளக்கங்கள் இதன் போது வழங்கப்பட்டன. வளவாளராக சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி உதயனி தெவரப்பெரும கலந்து சிறப்பித்தார்.


வன் முறைச் சம்பவங்களை குறித்து மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான புதிய பொறி முறைகளைஇதன்மூலம்எப்படி உருவாக்குவது தொடர்பிலும் பாலின அடிப்படை தொடர்பாக தாங்கள் கையாளும் முறை பற்றியும் குறித்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டன. சிவில் சமூகங்களுக்கு புதிய தலை முறை ஊடாக பெண்களை பாதுகாக்கவும் திறனை கட்டியெழுப்புவதற்கான உபாய முறைகளை பயன்படுத்தி தங்களது பொலிஸ் பிரிவில் திறன்களை கட்டியெழுப்பதங்களுக்கான வழிமுறைகளை கையாளுதல் தொடர்பிலும் மேலும் இதன் போது விரிவுரைகள் இடம் பெற்றன.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த குறித்த ஈ - விங் பெண்களுக்கான சுதந்திர அமைப்பின் ஸ்தாபகர் திருமதி காயத்திரி நளின காந்தன் பெண்களுக்கு இடம் பெறும் வன்முறை சம்பவங்களை கையாளவும் அதனை பொலிஸ் உத்தியோகத்தர்கள் எவ்வாறு பாலின அடிப்படையில் கையாள்வது தொடர்பிலான திட்டத்தினை நாங்கள் நடைமுறைப்படுத்தி வருகிறோம். எதிர்காலத்தில் பெண்கள் சிறுவர்கள் பாதிப்படைவதை குறைக்கும் அணுகு முறைகள் தொடர்பிலும் இன்றைய செயலமர்வில் பொலிஸாருக்கு பகிரப்படுகிறது. - என்றார்.

# தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கண்டித்து போராடி சிறைவாசம் அனுபவித்தவர்

## மாவைக்கு இராமேஸ்வரன் அஞ்சலி

(கேதீஸ்)



தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கண்டித்து போராடி சிறைவாசமும் அனுபவித்தவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினருமான மாவை சேனாதிராஜா. அன்னாரின் இழப்பு தமிழர்களுக்கு பேரிழப்பாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாவை சேனாதிராஜா வீட்டில் தவறி விழுந்த நிலையில், தலையில் நரம்பு வெடிப்பு ஏற்பட்டதால் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த உயிரிழந்துள்ளார். அமரர் மாவை சேனாதிராஜா தனது 19 வயதில் அரசியல் பயணத்தை தொடங்கி 83 வயது வரை முழுநேர அரசியல் தலைவராக தமிழ் மக்களுக்காக பணியாற்றியுள்ளார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் மாவை சேனாதிராஜாவுக்கும் மிக நெருங்கிய உறவு இருந்தது. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலம் முதல் இன்றைய பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் வரை இந்த உறவு தொடர்ந்தது. மலையக தமிழ் மக்களுக்காக இ.தொ.காவுடன் இணைந்து அவர் பல சந்தர்ப்பங்களில் குரல் கொடுத்துள்ளார் என்பதனை யாராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்துக்கும் உறவுகளுக்கும் எமது மலையக மக்கள் சார்பாக தனது இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன் என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தலைவர் மாவையின் இறுதிக் கிரியைகள்

மறைந்த இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் மாவை.சோ.சேனாதிராஜாவின் புகழுடல் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை தகனம் செய்யப்பட்டது

மாவிட்டபுரத்தில் உள்ள அண்ணாரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது புகழுடல் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாவிட்டபுரம் தச்சன்காடு இந்துமயானத்தில் அண்ணாரது பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்வில் அரசியல்வாதிகள், பொது அமைப்பினர் , மத குருமார்கள் , சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் , என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

1942ஆம் ஆண்டு ஒக்டோபர் 27ஆம் திகதி பிறந்த மாவை. சோ. சேனாதிராஜா வீட்டில் தவறி விழுந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைகள் பலனின்றி கடந்த 29ஆம் திகதி காலமானார்.










# குர்ஆன் மத்ரஸா மாணவர்களுக்கான இலவச தஜ்வீத் குர்ஆன் வழுங்கல்!

நூருல் ஹுதா உமர்

கல்முனைதாறுஸ்ஸபா அமையத்தின் ஏற்பாட்டில் தாறுஸ்ஸபா குர்ஆன் மத்ரஸா மாணவர்களுக்கான இலவச குர்ஆன் பிரதிகளை வழங்கும் நிகழ்வும் கௌரவிப்பும் 2025 ஜனவரி 30 வியாழக்கிழமை தாறுஸ்ஸபா தலைமையகத்தில் தாறுஸ்ஸபா அமையத்தின் பிரதானி உஸ்தாத் சபா முஹம்மத் நஜாஹி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் சட்டத்தரணி ரீ.எம்.எம்.அன்சார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தஜ்வீத் குர்ஆன் பிரதிகளை வழங்கி வைத்தார். மேலும் கௌரவ அதிதிகளாக கல்முனை பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.எம்.எம்.ஜெய்சன், கல்முனை கிராம சேவகர் எம்.ஏ.றஹ்னா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏறிப்கா ஜெஸ்மின் உட்பட கல்முனை தாறுஸ்ஸபா அமையத்தின் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.






# தொலைத் தொடர்பு கோபுரத்திலிருந்து வீழ்ந்து வவுனியாவில் ஒருவர் இறப்பு


வவுனியா, மகாறம்பைக்குளத்தில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் இருந்து வீழ்ந்த ஒருவர் பலியாகியுள்ளார் என வவுனியா பொலிஸார் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) தெரிவித்தனர்.

வவுனியா,மகாறம்பைக்குளம்பகுதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி திருத்தப்பணிகளை முன்னெடுத்துவந்த ஊழியர் ஒருவர் நிலைதடுமாறி கீழே வீழ்ந்துள்ளார்.

இதனால் படுகாயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் அனுராதபுரம், நிக்கவரெட்டி பகுதியை சேர்ந்த 30 வயதுடைய சத்துரங்க ஹேரத் என்ற இளைஞனே பலியாகியுள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.








# தமிழ் அரசுக் கட்சியைக் காப்பாற்ற மும் மூர்த்திகள் விலகவேண்டும்

## சிவமோகனுக்கு இப்படியொரு ஆசை

தமிழரசுக் கட்சியின் தேசிய பட்டியல் விழலுக்கு இறைத்த நீராக தம் இனத்தையே அழிக்கும் கோடலி காம்பின் கையில் கிடைத்துள்ளது. தமிழரசுக் கட்சி செயற்பட வேண்டுமாக இருந்தால் பதில் மும் மூர்த்திகளும் பதவி விலக வேண்டும் என தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மத்திய குழு உறுப்பினரும், முல்லைத்தீவு கிளைத் தலைவருமான சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவிததார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா அவர்களுக்கு எனது அஞ்சலிகளை தெரிவித்துக் கொண்டு சில விடயங்களை தெரிவிக்க வேண்டியுள்ளது.

இன்று அனுரகட்சி வடமாகாணத்தில் ஊடுருவல் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எமது இனத்தின் போரராட்டத்தை இனவாதமாக தென்னிலங்கையில் காட்டி அவர்களது உறுப்பினர்களை ஆயுதப் படையில் சேர்த்து எமது போராட்டத்தை முறியடிப்பதற்கு முன் நின்றார்கள். அதுமட்டுமல்ல 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் ஒன்றாக இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரிக்க வழக்கு தாக்கல் செய்தார்கள். இன்று அவர்கள் எமது தேசமெங்கும் வந்து தேசிய வீரர்கள் போல் தமது செயறபாடுகளை செய்து வருகிறார்கள். இதற்கு இடம்விட்டு கொடுத்தது யார்? தமிழர்கள் தமிழர்களாலேயே அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டது தான் அவர்களுக்கு இடம் கிடைத்தது.

ஈழ விடுதலை போராட்டத்தை திசை மாற்றிய கூட்டம் தம் இனத்தையே வெட்டி வீழ்த்தும் கோடாலி காம்புகாளாக தமிழரசுக் கட்சியை ஆக்கிரமித்து தவறான பாதையில் கொண்டு செல்ல முயல்கிறார்கள். எனவே, அதில் இருந்து தமிழரசுக் கட்சியை மீட்க வேண்டியவர்களாகஇருக்கின்றோம். மாவை சேனாதிராஜா அவர்களைப் பொறுத்தவரை அவர் 7 வருடங்கள் சிறையில் இருந்தவர். 7 வருடங்கள் என்றால் 2500 நாள்கள், 60 ஆயிரம் மணித்தியாலங்கள் சிறையில் இருந்துள்ளார். சிறைச்சாலை பற்றி உங்களுக்கு தெரியும்.

இவ்வாறு பல கஸ்ரங்களுக்கு மத்தியில் சிறையில் இருந்த மாவை சேனாதிராஜா அவர்களின் கால் தூசில்கூட இவர்களால் பிழை கண்டு பிடிக்க முடியாது. சிறையில் இருந்த காலத்தில்கூட உளரீதியாக மக்களின் விடுதலைக்காக இருக்கின்றேன் என்ற எண்ணத்தில் இருந்தார். பலமான உள்ள எண்ணங்களுடன் இருந்த அவர் இறுதிக் காலத்தில் சூழ்ச்சி கூட்டத்தால் வீழ்த்தப்பட்டுள்ளார் என்பது தான் உண்மை.

எனக்கு தெரிந்த தகவலின்படி வைத்தியசாலைக்கு செல்லுமுன் மாலை அல்லது மதிய நேரம் இருவர் சென்றுள்ளனர். பதில் செயலாளர் சத்தியலிங்கம், பதில் தலைவர் சிவஞானம் ஆகியோரே சென்றுள்ளனர். அவர்கள் இருவரும் அவரை நேரடியாக சந்தித்துள்ளார்கள். அவர்கள் சந்தித்த போது அவரது குடும்பத்தில் முக்கியமான எவரும் இருக்கவில்லை அவர்கள் இருவரும் சந்தித்து வெளியேறிய பின் எனது நெருங்கிய நண்பர் கனடாவில் இருந்து வந்த சூரி சந்தித்துள்ளார்.

என்ன கதைத்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. எப்படியான அழுத்தங்களை கொடுத்தார்கள் என்பதும் தெரியாது. அதைச் சொல்ல மாவை சேனாதிராஜா இன்று இல்லை. எனவே அவர்கள் தான் இதனை வெளிப்படுத்த வேண்டும்.



அதுவரை வழமை போல் இருந்த அவர் அவர்கள் சந்தித்த பின் தான் வழமைக்கு மாறாக செயற்பட்டு இந்த நிலை வந்தது. வழக்கு தாக்கல் கோவைகள் எடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அதிகாலையில் மூளை நரம்பு வெடித்ததால் இந்த நிலை ஏற்பட்டது. நான் சொல்வது தவறாக இருந்தால் பகிரங்க மன்னிப்பு கேட்க தயாராக இருக்கின்றேன். அந்த இருவரும் ஏன் சென்றீர்கள் என்ன கதைத்தீர்கள் என்பதை வெளிப்படுத்த தயாராக இருக்க வேண்டும்.

தேசியப் பட்டியல் மாவை சேனாதிராஜா அவர்களுக்கு கொடுத்திருக்கப்பட வேண்டும். கொடுத்திருந்தால் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து தலைவர் விட்ட பாதையில் ஒரு தமிழர் அணியை செயற்படுத்தி இருப்பார். அது தான் அவரது நோக்கமாகவும் இருந்தது. யாரையும் கட்சியை விட்டு கலைக்கும் எண்ணம் அவரிடம் இல்லை. போனவர்களையும் மீள இணைத்து தேசிய அமைப்பாக தமிழர்களை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

ஆனால் அவரது முயற்சி துரோகத்தால் தோற்கடிக்கப்பட்டது. பண்டார வன்னியன் காக்கை வன்னியனால தோற்கடிக்கப்பட்டது போல் மாவை சேனாதிராஜா நவீன காக்கை வன்னியர்களால் தோற்கடிக்கப்பட்டார் என்பது தான் உண்மை.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் போது தேசியப் பட்டியல் இணைக்கபட வேண்டும். அது தவறினால் தேசியப் பட்டியல் நேரடியாக தேர்தல் திணைக்களத்திற்கு வழங்க வேண்டும். இது இரண்டும் செய்யப்படவில்லை அது ஈமெயில் அனுப்பபட்டதாக கல்வி மான்களும், அதற்கு பொறுப்பானவர்களும் சொல்கிறார்கள். பட்டியல் அனுப்பியிருந்தால் முதலாவது பெயராக மாவை சேனாதிராஜா அவர்களின் பெயர் இருந்தது. தாங்கள் தோற்று விட்டால் அதனை தாங்கள் எடுப்பதற்காக சூழ்ச்சி செய்துள்ளார்கள். இந்த பற்றிய நடைமுறைகள் அவர்களுக்கு தெரியாதா.

இது திட்டமட்டு செய்யப்பட்ட சதி. அந்த சதி மூலம் அந்த தேசியப் பட்டியலை தாங்கள் எடுத்துள்ளார்கள். தேசிய பட்டியல் விழலுக்கு இறைத்த நீராக தம் இனத்தையே அழிக்கும் கோடலி காம்பின் கையில் கிடைத்துள்ளது. வன்னியில் மூன்று மாவட்டங்கள் உள்ளது. வவுனியாவில் நேரடியாக தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருக்கு கிடைத்த வாக்கு 406. ஒரு கிராம சேவையாளர் பிரிவுக்கு ஒன்று கூட விழவில்லை. அப்படியான ஒருவர் தான் தேசியப்பட்டியல் எடுத்துள்ளார். இது ஒரு சூழ்ச்சி. யாருடைய வழிகாட்டலில் இதை எடுத்துள்ளார்கள என அறிய வேண்டும். இந்த நிகழ்ச்சி நிரலின் பின் யார் இருக்கிறார்கள் என்பது தெரியாது.

தமிழரசுக் கட்சியை மீட்டு எடுக்க வேண்டுமாக இருந்தால் பதில், பதில், பதில் என்கின்ற மும்மூர்த்திகள் தங்களது பதவிளை விட்டு பதவி விலக வேண்டும். தமிழரசுக் கட்சியை சுமுகமாக இயங்க வழி விடவேண்டும். பொதுக் குழுவை தடை செய்த வழக்கை பின்வாங்கிக் கொள்ள வேண்டும். கூட்டத்தில் வாக்குறுதி வழங்கியது போன்று நிபந்தனையின்றி வழக்கை மீளப் பெற வேண்டும். இன்று நிபந்தனகளை வைத்துள்ளார்கள். தமிழரசுக கட்சியை மீடெக்க உதவ வேண்டும் என்பது தான் என்னுடைய அவா. அதுவே மாவை சேனாதிராஜா அவர்களின் ஆத்ம சாந்தியடைய வழிவகுக்கும். அல்லது தமிழரசுக்கட்சி உருக்குலைந்து விடும் என்பதே எங்களது ஆதங்கம் எனத் தெரிவித்தார்.

## தம்பலகாமம் படுகொலையின் 27ஆவது ஆண்டு நினைவேந்தல்

(ஹலால்தீன்)

தம்பலகாமம் படுகொலையின் 27 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் தம்பலகாமம் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி பகுதியில் உறவினர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களால் அனுஸ்டிக்கப்பட்டது.


இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத்தூபிக்கு மலர்தூவி விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப் பட்டதுடன் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

தம்பலகாமம் பிரதேசத்தின் பாரதிபுரம் கிராமத்தில் 01.02.1998 அன்று இடம்பெற்ற படுகொலை சம்பவத்தில் ஆறுமுகம் சேகர் (வயது 32), அமிர்தலிங்கம் சுரேந்திரன் (வயது 13), அமிர்தலிங்கம் கஜேந்திரன் (வயது 17), பொன்னம்பலம் கனகசபை (வயது 47), முருகேசு ஜனகன் (வயது 18), நாதன் பவளநாதன் (வயது 29), சுப்பிரமணியம் திவாகரன் (வயது 23), குணரத்தினம் சிவராஜன் (வயது 23) உள்ளிட்ட 8 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த படுகொலைகள் தொடர்பாக திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்கு முறையிடப்பட்டது. அந்தவகையில் 13 பொலிஸாருக்கு எதிராக முதலில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் குறித்த வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இங்கு 5 பேர் மீது 37 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

குற்றம் இடம்பெற்று 26 ஆண்டுகளின் பின்னர் 2024 ஏப்ரல் 26 அன்று இவ்வழக்குத் தொடர்பான தீர்ப்பு அநுராதபுரம் வடமத்திய மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி மனோஜ் தல்ஹொடபிட்டிய அவர்களினால் அன்றைய காலப்பகுதியில் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய அதிகாரி, பிரதி பொலிஸ் பரிசோதகர், மேலும் 3 பொலிஸாருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான 27 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றன.





காலைக்கதிர்
Kalaikkathir

# கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் 'செயற்பட்டு மகிழ்வுறும்' விளையாட்டு வீடு.

(அஷ்ரப்கான்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2025 ஆம் கல்வி ஆண்டிற்குப் புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்களின் 'செயற்பட்டு மகிழ்வுறும்' விளையாட்டு வீட்டினை பாடசாலை அதிபர் திரு.ஏ.ஜீ.எம்.றிசாத் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார்.

ஆரம்ப பிரிவின் பகுதி தலைவர் ரீ. வில்வராஜாவின் தலைமையில் இடம்பெற்ற இந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்ச்சியில் பாடசாலையின் பிரதிஅதிபர், விஞ்ஞானப் பாட ஆசிரிய ஆலோசகர், மற்றும் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள், பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலக மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி தீபானி அபேசேகர, பெண்கள் சுதந்திர அமைப்பான ஈவிங் தலைவர் திருமதி காயத்திரி நளினகாந்தன், ஆசிய பவுண்டேசனின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் எஸ்.சி.சமிலா பெர்னான்டோ உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.











# மாவை சேனாதிராசாவுக்கு திருக்கோவில் இறுதி அஞ்சலி

(கார்த்திகேசு)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா அவர்களுக்கு இறுதி அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

இந்த அஞ்சலி கூட்டமானது விநாயகபுரம் பொது மக்களின் ஏற்பாட்டில் விநாயகபுரம் மின்னொளி விளையாட்டு திடலில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் காந்தரூபன் தலைமையில் நேற்று நண்பகல் இடம்பெற்று இருந்தது.

இதன்போது அமரத்துவம் அடைந்த மாவை சேனாதிராசா அவர்களின் உருவப்படத்திற்கு திருக்கோவில் பிரதேச தமிழரசு கட்சியின் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள் முன்னாள் மாகாணசபை உறப்பினர், வட்டாரக்கிளை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரால் மலர் மாலை அணிவித்து தீபம் ஏற்றி மலர்தூபி கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்தி இருந்;தனர்.

இதனைத் தொடர்ந்து அமரர் மாவை சோ.சேனாதிராசா அவர்களின் அரசியல் பயணம் தொடர்பாக அஞ்சலி உரைகளும் இடம்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.02.2025இல் வெளியிடப்பெற்றது